டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தைச் சரிபார்ப்பதற்காக பல்வேறு இடங்களைச் சென்று பார்க்கிறபோது, நாங்கள் கண்ட உண்மை, பெண்களுக்குத் தனியாக, பெண்களே, ஓரிடத்திலே தங்களுடைய பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு நிலைமை உண்டாக வேண்டும் என்று கண்டறிந்தோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே, மருத்துவம் சார்ந்த, `Cosmetology and Hair-Dressing` என்ற ஒரு டிரெயினிங் கோர்ஸை அமைத்துத்தர, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு ஆய்வு செய்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

261—

கட்டிட களப்பணிகளுக்கான அதிகாரிகளுக்கு மேற்பார்வைப் பணி அளித்தல்.

*** 20800**— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது கட்டிட களப்பணிக்காக நியமித்துள்ள அதிகாரியை இந்திய முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 47-ன் கீழ் மேற்பார்வைப் பணி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

263—

அம்பாசமுத்திரம் தொகுதி, வைராவிகுளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தல்

*** 21481**— திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 ஏப்ரல் 13]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, வைராவிகுளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

276—

அன்னூர் காரேகவுண்டன்பாளையம் முதல் சாலையூர் வரை சாலைகளைச் செப்பனிடுதல்.

**** 21377***— *டாக்டர் மு. சீனியம்மாள்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னூர் காரேகவுண்டன்பாளையம், என்னகரிச்சாம்பாளையம்-சாலையூர் வரை சாலைகள் பழுதடைந்துள்ளதால், இதனைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) :சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு வேலை துவங்க இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

DTP–53/100-6

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS